**CBR /CBID பணியாளர்கள் (சம்பள தொழிலாளர்களும் தன்னார்வ தொழிலாளர்களும்) COVID-19 என்கிற சர்வதேச பரவல் நோய் தருணத்தில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்**

**CBR/CBID பணியாளர்கள் COVID-19 தருணத்தில் மிக முக்கியமான பாத்திரத்தை வகுக்கிரார்கள்.** அவர்களின் செயல்கள் ஊனமுற்றவர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் முதியோர்கள், வடூ அற்றவர்கள் போன்ற மற்றபடி பாதிக்கப்படக்கூடிய சமுதாய நபர்களுக்கும் பெரிய உதவியும் ஆதரவுமாகும். இவ்வாறு செயல்படும்போது அவர்கள் சமுதாயம் முழுவதற்கும் பாதுகாப்பு அளிக்கிறார்கள்.

1 CBR/CBID பணியாளர்கள் சமூகங்களுக்கு உணவு , தண்ணீர் மருந்து விநியோகங்கள் போன்ற மிக அவசியமான காரணங்களுக்கு மட்டுமே வருகை அளிக்கவேண்டும். இவ்வாறு செல்லும் சமயங்களில் சமூகத்தொலைவை (social distancing) கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். **CBR/CBID பணியாளர்கள் சமூக உறுப்பினர்களையும் அவர்கள் குடும்பங்களையும் அடிக்கடி தொலைபேசி (டெக்ஸ்ட் அல்லது வாட்ஸாப்) மூலம் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகிறர்கள்** - இதன் காரணங்கள் அவர்களுக்குத் தகவல்கள் தெரியப்படுத்தவும், அவர்களின் தேவைகளைப் பற்றி தரவுகள் சேகரிக்கவும், மேலும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்க்கு வேண்டிய மேற்கொண்ட ஆலோசனைக்காகவும்.

2 CBR/CBID செயல்முறை திட்டத்தினால் உருவாக்கி பரப்பிய தகவல்கள் உள்ளூர் நிலைப்பாடு, ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் இருக்கவேண்டும். மற்றும் , பின்வரும் PCPE என்கிற நபர் மையமான அவசரகால தயார்நிலையின் அடிப்படையான கரிசனைகளை கவனத்தில் வைக்கவேண்டும்

   a. COVID-19 சம்பத்தப்பட்ட உள்ளூர் இக்கட்டான நிலைப்பாடைத் தெரிந்துகொள்ளுங்கள்.
   b. சமூக உறுப்பினர்களுடன் கலந்து என்ன என்ன செய்ய வேண்டும், ஊனமுற்றவர்களையும் இதர பாதிக்கப்படக்கூடிய நபர்களையும் உள் சேர்ப்பது

யாரின் பொறுப்பு என்பது போன்ற கேள்விகளை மனதில்கொண்டு ஒரு திட்டத்தை உருவாக்குங்கள்.

c. உங்கள் சமூகத்தை உற்சாகப்படுத்தி தயாராக்குங்கள்.
d. நிலைமையில் ஏற்படும் மாறுதல்களைப்பற்றி விழிப்புணர்வுடன் இருங்கள்; தேவை என்றால் திட்டத்தை அதற்கேற்றபடி சரிசெய்யுங்கள்.
e. ஊனமுற்றவர்களையும் அவர்கள் குடும்ப நபர்களையும் வாழ்வாதார நடவடிக்கைகளில் இணைப்பதை எளிதாக்குங்கள்.
f. ஒவ்வொருக்கொருவர் ஆதரவாக இருங்கள்.

**இந்த ஆறு புள்ளிகளும் ஏற்கெனவே பணியாளர்களின் பொறுப்பில் இருக்கக்கூடிய தொலைபேசி/ ஈமெயில் தொடர்பின் ஆதாரமாக இருக்கலாம்.**

3. **உள்ளூர் இக்கட்டு நிலைகளைத் தெரிந்துகொள்ளுங்கள்**. சமூகப் பணியாளர்கள் உள்ளூர் சூழ்நிலையைப் பற்றி முடிந்தவரை நன்றாகத் தெரிந்துகொள்வது அவசியம். CBR/CBID பணியாளர்கள் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்திய விதிகளையும் நடைமுறைகளையும் நன்றாகத் தெரிந்துகொண்டு உள்ளூர் நிர்வாகங்களுடன் ஒத்துழைத்து ஊனமுற்றவர்களின் தேவைகளைத் திட்டமிடும் நிலையிலும் பின்னர் அமுல்படுத்தும் நிலையிலும் கருத்தில் வைத்து உறுதி செய்யவேண்டும்.

4. **சமூக உறுப்பினர்களுடன் கலந்து உரையாடி என்ன செய்வது மற்றும் யார் பொறுப்பானவர்கள் என திட்டமிடல்.** முடிந்தவரை சமூகசேவை செய்யும் குடும்பங்களுடனும், தனிநபர்களுடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களின் ஒத்துழைப்போடு ஒரு திட்டத்தை உருவாக்குங்கள். உள்ளூர் திட்டமுறைகள் அமுல்படுத்தப்படும் கட்டத்தில் ஊனமுற்றவர்களுடைய தேவைகளைக் கருத்தில் கொள்ளுமாறு உறுதிப்படுத்துங்கள். இந்த திட்டமுறைகளில் தனிப்பட்ட சூழ்நிலைகளைப் பொறுத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் உதாரணமாக பின்காணும் புள்ளிகள் உள்ளடக்கப்பட்டிருக்கும்:

a.COVID-19 ஆல் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் சமூகத்தில் களங்கப்படுவதைத் தவிர்த்தல்.

b. ஊனமுற்றவர்களுடனும் அவர்களின் குடும்பங்களுடனும் இணைந்து வேலை செய்து ஆரோக்கிய வசதி (மனநல ஆரோக்கியமும் கூட) / மறுவாழ்வு வசதிகள், மருந்துகள் / ரத்தம் போன்றவைகள் தேவைக்கேற்ப கிடைக்கச் செய்தல்.

c. ஊனமுற்றவர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் வசதிகளும் (உதாரணம்: பராமரிப்பு கொடுப்பனவு, பென்ஷன்) மற்றும் கோவிட் தொடர்பான இதர உதவிகளும் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்தல்.

d. ஊனமுற்றோர்களையும் சமூகத்தின் இதர பாதிக்கப்படக்கூடியவர்களையும் தனிப்படுத்தல் இதர உறுப்பினர்கள் அவர்களுக்கு ஆதரவு தருதல், சாப்பாடு வழங்குதல், அரசாங்கம் விநியோகிக்கும் உணவுப்பொருள்கள் அவர்களை சேருதல், அவர்களுக்காக கடைகளில் பொருட்கள் வாங்குதல் - இந்த நடவடிக்கைகளை செயல் படுத்தும்போது அவர்களின் பாதுகாப்புக்காக தாமும் விதிகளைக் கடைப்பிடித்தல்.

e. கோவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களை சமூக உறுப்பினர்களிடமிருந்து பிரித்து தனிப்படுவதுவது - ஆனால் அவர்களையோ குடும்ப உறுப்பினர்களையோ இழிவு படுத்தாமலும் பாகுபாடு செய்யாமலும் இருத்தல்.

f. அடிக்கடி கவனமாக கை சுத்தப்படுத்த சோப்பும் சுத்த தண்ணீரும் அளிப்பது.

g. சோப்பும் சுத்த தண்ணீரும் அருகாமையில் இருப்பதை உறுதிப்படுத்தல்.

h. முகக்கவசம் செய்தல், வெளியில் செல்லும் நேரமும் கூட்டமான இடங்களுக்குச் செல்லும் பொழுதும் அவைகளைப் பயன்படுத்தல் , அவசியமான பயணங்கள் மட்டும் ஏற்கொள்ளுதல்.

i. கைகழுவல் , சமூக தொலைவு (2 மீட்டர் தூரம்) பற்றி தெளிவுபடுத்தல்

j. கோவிட்-19 அறிகுறி எவருக்கும் ஏற்பட்டால் உள்ளூர் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு ஆரோக்கிய மையம் ஒன்றை அணுகவும்.

5. **உங்கள் சமூகத்தை உற்சாகப்படுத்தி தயார் செய்யுங்கள்.**
எந்த நடவடிக்கைகள் தேவை, எதை மேற்கொள்ளமுடியும் , யார் எதற்கு பொறுப்பு என்பதைப்பற்றி சமூகம் முடிவுசெய்யும். சமூக சேவகர் சம்பத்தப்பட்ட அனைவரையும் உற்சாகமூட்டி சமீபத்தில் கிடைத்த தகவல்களின் ஆதாரத்தில் நடைமுறைக்குரிய முடிவுகள் எடுக்க வழிகாட்ட வேண்டும்.

6. **சூழ்நிலையில் ஏற்படும் மாறுதல்களைத் தெரிந்துகொண்டு அதற்கேற்றபடி உங்கள் திட்டத்தை சரிபடுத்துங்கள்.**
சமூக சேவகர் சமூக மக்களுடன் அடிக்கடி தொடர்பில் இருந்துகொண்டு சமூக அளவிலும் தனிநபர்கள், மற்றும் அவர்கள் குடும்ப அளவிலும் நடைபெறும் மாறுதல்களைக் குறித்துக்கொண்டு, அவர்களுக்கு அன்றாட செய்யிதிகளை (உதாரணம்: பாதிக்கப்பட்டவர்களைப் பற்றிய புள்ளிவிவரங்கள், புதிய உள்ளூர் வழிமுறைகள்) புதிப்பிப்பார். சமூகமும் சமூக சேவகரும் சேர்ந்து மாறுதல்களுக்குத் தகுந்தபடி உள்ளூர் விதிகளைக் கவனத்தில் வைத்துக்கொண்டு ஒரு சிறந்த வழியை உருவாக்கவேண்டும்.

7. **வாழ்வாதார நடவடிக்கைகளில் உள்ளடக்கக் கொள்கைகளைக் கைபிடியுங்கள்:**
அரசாங்கம் அனுமதிக்கும் வாழ்வாதார நடவடிக்கைகளில் (விவசாயம், MGNREGS என்கிற கிராமப்புற வேலைவாய்ப்பு) ஊனமுற்றவர்களும் அவர்கள் குடும்பங்களும் பங்கேற்பதை உறுதிப்படுத்துங்கள். அரசாங்கம் / இதரர்கள் அளிக்கும் ஆதரவுகளைப் பயன்படுத்துங்கள்.

8. **ஒருவொருக்கொருவர் ஆதாரமாக இருங்கள்** :
உடன் வேலை செய்யும் சேவகர்களின் மேல் கவனம் செலுத்துங்கள்; இதர ஊனமுற்றவர்கள் மேல் கவனம் செலுத்துங்கள்; முதியோர்கள் மேல் கவனம் செலுத்துங்கள்; சமூகத் தலைவர்கள் மேல் கவனம் செலுத்துங்கள். இத்தகைய ஒத்துழைப்பாலும் பகிர்வாலும்தான் இந்த சர்வதேச நோயையும் அதனுடன் சேர்ந்த

பயத்தையும் குறைத்து சமயத்துக்கேற்ற இடையீடுகளை வழங்க முடியும்.

9. **தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்**:
மக்கள், இடங்கள், வியாதிகள், வெற்றிகள், பிரச்சினைகள் என்பது பற்றி நம்பிக்கையான பதிவுகளைப் பராமரிப்பது சமூக சேவகர்களுக்கு மிக முக்கியம். இந்தப் பதிவுகள் உள்ளூர் விதிகளுக்கு இணக்கமான படிவத்தில் இருப்பது அவசியம் - ஏனென்றால் அதன் மூலம் தகவல்களை சீக்கிரமாகவும் துல்லியமாகவும் CBR-மேலாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் (கோஆர்டினேடர்ஸ்) மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு அறிக்கை அளிக்க இயலும்.

10. CBR /CBID பணியாளர்கள் முதல் பட்சத்தில் தாங்களே அரசாங்கம் அறிவித்துள்ள பாதுகாப்பு மற்றும் தடுப்பு விதிகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

---

Produced by Professor Sally Hartley (UK) and Venkatesh Balakrishna (India) with contributions from Christine Cornick and the Zambian CBR/CBID team, Abdul Busuulwa CAN (Uganda) Professor Gwynneth Lelewellyn (Australia) Elanie Marks (Geneva, WHO)- adapted for the Indian context